ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1859/32 - 2014 අප්‍රේල් මස 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2014.04.24

*1859/32 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**1990 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, மாகாண சபைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாண சபை அரச சேவையின் அதிகாரங்களை கையளிப்பது தொடர்பான பணிப்புரை**

மேல் மாகாணத்தின் ஆளுநராகிய செய்யத் அலவி மௌலானா ஆகிய நான், 1990 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, மாகாண சபைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு இணங்க கீழே அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ள மேல் மாகாண சபை அரச சேவையின் பதவிகள் தொடர்பாக உத்தியோகத்தர்களை நியமித்தல், இடமாற்றம் செய்தல், பதவி நீக்கம் செய்தல் (பதவிகளுக்கு விடுவித்தல் உள்ளடங்கலானது) தொடர்பான அதிகாரங்களும், கீழே அட்டவணை 2 இல் விபரிக்கப்பட்டுள்ள மேல் மாகாண சபை அரச சேவையின் பதவிகள் தொடர்பாக உத்தியோகத்தர் ஒருவரை நியமித்தல், இடமாற்றம், பதவி நீக்கம் (பதவிகளுக்கு விடுவித்தல் உள்ளடங்கலானது) தொடர்பான அதிகாரங்கள் என்னால் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் அவ் அதிகாரங்களைத் தவிர அந்த 1 மற்றும் 2 ஆகிய அட்டவணைகளுக்கு உரிய பதவிகள் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கை மற்றும் சேவையில் இருந்து அகற்றுதல் போன்ற ஏனைய அதிகாரங்கள் (உரியவை மட்டும்) மற்றும் மேல் மாகாண அரச சேவையின் ஏனைய எல்லா பதவிகள் தொடர்பான நியமனம், இடமாற்றம், பதவி நீக்கம், அவர்களின் ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பான அதிகாரங்களை 2014, ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வருமாறு மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவிற்கு கையளிக்கின்றேன்.

மேலும், கீழே 2 ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவி தொடர்பாக மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழு சபையினால் ஒழுக்காற்று நடவடிக்கை அத்துடன் பதவி நீக்குதல் தொடர்பான அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதைத் தவிர மேல் மாகாண அரச சேவையில் ஏனைய பதவிகள் தொடர்பான மேலே கையளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் போது அதில் அதிருப்தி அடைபவர்களுக்கு மேல் மாகாணத்தின் ஆளுநருக்கு மேன்முறையீடு செய்வதற்கு உரிமை உண்டு என்பதனையும் பணிப்புரை செய்து வெளியிடுகின்றேன். மேலும், இவ்வாறு கையளிக்கப்பட்ட அதிகாரங்கள் தொடர்பாக 1990 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, மாகாண சபைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 32 (2அ) உப பிரிவின் கீழ் குறிப்பிடப்படும் அதிகாரத்திற்கு இணங்க மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழு சபை செயற்படும் போது அது தொடரபாக விசேடமாக என்னால் பணிப்புரை செய்யப்படாத வரை மேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு சபை தீர்மானிப்பதைப் போன்று அவ் அதிகாரங்கள் மேல் மாகாணத்தின் பிரதம செயலாளர் அல்லது ஏதாவது உத்தியோகத்தர் ஒருவருக்கு கையளிப்பதற்கு உரிய அதிகாரத்தினையும் அங்கீகாரத்தினையும் வழங்குகின்றேன்.

மேலும், இவ் அதிகார கையளிப்பு நடைமுறைக்கு வரும் தினத்துக்கு முன்னரான தினத்தில் இருந்து நடைமுறைக்கு வருமாறு மேல் மாகாண அரச சேவையின் அதிகாரங்களை ஒப்படைப்பதற்கு உரிய 1855/38 ஆம் இலக்க 2014, மாச்சு மாதம் 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் என்னால் வெளியிடப்பட்டிருந்த 2014 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 24 ஆந் திகதிய பணிப்புரைகளை, அப் பணிப்புரைகளின் கீழ் இதுவரை எடுக்கப்பட்ட எந்தவொரு நடவடிக்கைகளுக்கும் பாதிப்பொன்று ஏற்படாதபடி இங்கு இல்லாதொழிக்கின்றேன்.

எஸ். அலவி மௌலானா,
மேல் மாகாணத்தின் ஆளுநர்.

மேல் மாகாண ஆளுநரின் செயலகம்,
இல. 98/4, ஹெவ்லொக் வீதி,
கொழும்பு 05,
2014, ஏப்பிறல் 24.

**அட்டவணை 1**

* மேல் மாகாணத்தின் ஆளுநரின் செயலாளர்
* மேல் மாகாணத்தின் மாகாண சபைச் செயலாளர்
* மேல் மாகாணத்தின் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுச் சபைச் செயலாளர்
* மேல் மாகாணத்தின் மாகாண அமைச்சின் செயலாளர்கள்
* மேல் மாகாணத்தின் பிரதம செயலாளர் காரியாலயத்தின் பிரதிப் பிரதம செயலாளர்கள்
* மேல் மாகாணத்தின் மாகாண சபையின் திணைக்களத் தலைவர்கள் – (கல்வித் திணைக்களம் தவிர)
* மேல் மாகாணத்தின் மாநகர சபைகளின் நகர ஆணையாளர்கள்
* மேல் மாகாணத்தின் பிரதம செயலாளர் காரியாலயத்தின் பிரதான உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர்
* மேல் மாகாணத்தின் பிரதம செயலாளர் காரியாலயத்தின் பிரதான கணக்காளர் (கணக்கும் கொடுப்பனவும்)
* மேல் மாகாணத்தின் பிரதம செயலாளர் காரியாலயத்தின் பிரதான கணக்காளர் (வரவு செலவு)
* மேல் மாகாணத்தின் பிரதம செயலாளர் காரியாலயத்தின் பிரதான கணக்காளர் (நிதியும் வருமானமும்)
* மேல் மாகாணத்தின் மனித வள அபிவிருத்தி ஸ்தாபனப் பணிப்பாளர்
* மேல் மாகாணத்தின் ஆளுநர் செயலகத்தின் உதவிச் செயலாளர்கள்.

**அட்டவணை 2**

* மேல் மாகாணத்தின் கல்விப் பணிப்பாளர்

*5- 228*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.